ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2301/17 - 2022 ඔක්තෝම්බර් මස 10 වැනි සඳුදා - 2022.10.10
2301/17 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 10 ஆந் திகதி திங்கட்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பீ. 24/51* (VII)

**(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டம்**

(203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் பிரிவுகள் 44, 123, 124, 125, 126, 126ஆ, 128, 132, 132அ மற்றும் 231 என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**பந்துல குணவர்தன,**
போக்குவரத்து மற்றும் பெருந்தெருக்கள் அமைச்சர்.

கொழும்பு,
2022, ஒற்றோபர் 10.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ் ஒழுங்கு விதிகள் "2022 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க மோட்டார் வாகன (சாரதி உரிம அறவீடு) ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. சாதாரண சேவை மற்றும் ஒரே நாள் சேவை தொடர்பான இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை I இன் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட நோக்கங்களுக்காக செலுத்தப்படற்பாலதான அறவீடானது, அவ்வட்டவணையின் நிரல் II மற்றும் நிரல் III இலுள்ள நேரொத்த பதிவுகளில் குறித்துரைக்கப்பட்டவாறிருத்தல் வேண்டும்.

1A - PG 6001 — 506 (2022/10)
இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

*3.* இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை II இன் நிரல் ஐ இல் குறித்துரைக்கப்பட்ட இணையவழி சேவைக்காக செலுத்தப்படற்பாலதான அறவீடானது, அவ்வட்டவணையின் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவுகளில் குறித்துரைக்கப்பட்டவாறிருத்தல் வேண்டும்.

*4.* 2009 ஆம் ஆண்டின் மாச்சு மாதம் 27 ஆந் திகதிய 1594/27 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2009 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சாரதி உரிம (அறிவீடு) ஒழுங்குவிதிகளானவை இத்தால் இல்லாது ஒழிக்கப்படுகின்றன.

**அட்டவணை I**

(ஒழுங்குவிதி 2)

**சாதாரண சேவை மற்றும் ஒரே நாள் சேவைக்கான அறவீடுகள்**

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *வழங்கீட்டின் நோக்கம்* | *சாதாரண சேவை அறவீடு (ரூபா.)* | *ஒரே நாள் சேவை அறவீடு (ரூபா.)* |
| 1. பழகுநர் அனுமதிப்பத்திரம் மற்றும் புதிய சாரதி உரிமமொன்றுக்கான விண்ணப்பப் படிவம் - | | |
| (அ) ஒரு வகுப்பிற்கு; | 2500.00 | 3500.00 |
| (ஆ) ஒரே நேரத்தில் இரண்டு வகுப்புகளுக்கு; | 3000.00 | 4000.00 |
| (இ) ஒரே நேரத்தில் மூன்று வகுப்புகளுக்கு; | 3500.00 | 4500.00 |
| 2. சாரதி உரிமத்திற்கான எழுத்துமூலப் பரீட்சைக்கு மீள விண்ணப்பித்தல் | 500.00 | - |
| 3. ஒரு சோடி " L பலகைகளுக்கு" விண்ணப்பித்தல் - | | |
| (அ) 11" X 9" அளவினையுடைய | 1000.00 | 1000.00 |
| (ஆ) 5" X 4" அளவினையுடைய | 500.00 | 500.00 |
| 4. சாரதி உரிமத்திற்கான செயன்முறைப் பரீட்சைக்கு மீள விண்ணப்பித்தல் | 1000.00 | - |
| 5. உளதாம் சாரதி உரிமத்தில் புதிய வாகனங்களின் வகுப்புக்களைச் சேர்த்தல் - | | |
| (அ) ஒரு வகுப்பிற்கு; | 2500.00 | 3500.00 |
| (ஆ) ஒரே நேரத்தில் இரண்டு வகுப்புகளுக்கு; | 3000.00 | 4000.00 |
| (இ) ஒரே நேரத்தில் மூன்று வகுப்பகளுக்கு; | 3500.00 | 4500.00 |
| 6. சாரதி உரிமம் ஒன்றைப் புதுப்பித்தல் அல்லது செல்லுபடியாகும் காலப்பகுதியை நீடித்தல் - | | |
| (அ) ஒரு காலப்பகுதிக்கு; | 2800.00 | 4000.00 |
| (ஆ) காலாவதியான ஒரு ஆண்டிற்கு அல்லது ஒரு ஆண்டிற்கும் குறைவான காலப்பகுதியொன்றுக்கு மேலதிக அறவீடு; | 500.00 | - |
| 7. (அ) உளதாம் செல்லுபடியாகும் காலத்துக்காக சாரதி உரிமமொன்றின் இணைப்பிரதி யொன்றினை வழங்குதல் | 2800.00 | 4000.00 |
| (ஆ) சாரதி உரிமத்தின் இழப்பு காரணமாக உளதாம் செல்லுபடியாகும் காலத்துக்கென சாரதி உரிமமொன்றின் இணைப்பிரதி யொன்றினை வழங்குதல் | 7800.00 | 9000.00 |
| (இ) காலாவதியான ஒரு ஆண்டிற்கு அல்லது ஒரு ஆண்டிற்கும்குறைவான காலப்பகுதியொன்றுக்கு மேலதிக அறவீடு | 500.00 | - |
| 8. வாகன உரிமமொன்றின் பிரித்தெடுக்கப்பட்ட பகுதியொன்றை வழங்குதல் | 1000.00 | - |
| 9. சாரதி உரிமமொன்றின் விபரங்களை மாற்றுதல் | 3300.00 | 4500.00 |

| *நிரல் I* | *நிரல் II* | *நிரல் III* |
|---|---|---|
| *வழங்கீட்டின் நோக்கம்* | *சாதாரண சேவை அறவீடு (ரூபா.)* | *ஒரே நாள் சேவை அறவீடு (ரூபா.)* |
| 10. நிரல் I மற்றும் நிரல் II இலுள்ள நேரொத்த பதிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட அறவீட்டுக்கு மேலதிகமாக, மேலே இந்நிரலின் 5, 6 மற்றும் 7 இன் விடயங்களில் குறிப்பீடு செய்யப்பட்டவாறாக<br>(அ) உளதாம் சாரதி உரிமத்திற்கு புதிய வாகனங்களின் வகுப்புக்களைச் செர்த்தல்;<br>(ஆ) சாரதி உரிமத்தின் வலிதான காலப்பகுதியைப் புதுப்பித்தல் அல்லது நீடித்தல்; அல்லது<br>(இ) சாரதி உரிமமொன்றின் இணைப்பிரதியொன்றை வழங்குதல்,<br>தொடர்பில் புதிய சாரதி உரிமமொன்றை வழங்கும் நேரத்தில் சாரதி உரிமமொன்றின் விபரங்களை மாற்றுதல். | 500.00 | 500.00 |
| 11. உளதாம் சாரதி உரிமத்திலிருந்து புதிய சாரதி உரிமத்திற்கு மாற்றுதல்; | 2800.00 | 4000.00 |
| 12. (அ) இலங்கைப் பிரசையொருவர் தொடர்பில் வெளிநாட்டு சாரதி உரிமமொன்றினை புதிய சாரதி உரிமத்திற்கு மாற்றுதல் | 3300.00 | 4500.00 |
| (ஆ) வெளிநாட்டுப் பிரசையொருவர் தொடர்பில் வெளிநாட்டு சாரதி உரிமமொன்றினை புதிய சாரதி உரிமத்திற்கு மாற்றுதல் | 15,000.00 | 20,000.00 |
| 13. வெளிநாட்டுப் பிரசையொருவருக்கு சாரதி உரிமமொன்றினை வழங்குதல் | 25,000.00 | 30,000.00 |
| 14. ஒரு மாத காலத்திற்கென வருகை தருவோருக்கு தற்காலிக சாரதி உரிமமொன்றினை வழங்குதல் | 2000,00 | - |
| 15. சர்வதேச சாரதி அனுமதிப் பத்திரமொன்றினை வழங்குதல் | 3000.00 | 3500.00 |
| 16. அஞ்சல் கட்டணங்கள் (பொதியிடுதல், விநியோகித்தல் மற்றும் கொரியர் கட்டணங்கள் உட்பட) | 225.00 | - |

## அட்டவணை II

(ஒழுங்குவிதி 3)

### வெளிநாடுகளிலுள்ள இலங்கை சாரதி உரிமத்தை வைத்திருப்போருக்கான இணையவழி சேவைக்கான அறவீடுகள்

| நிரல் I | நிரல் II |
|---|---|
| இணையவழி சேவை | அறவீடு (USD) |
| இயைபான இலங்கைத் தூதரகம் அல்லது உயர்ஸ்தானிகரகத்தின் ஊடாக மின்னஞ்சல் மூலம் வெளிநாடுகளிலுள்ள இலங்கைப் பிரசையொருவரினால் ஆக்கப்பட்ட விண்ணப்பமொன்றின்மீது, மோட்டார் வாகன திணைக்களத்தினால் வழங்கப்பட்ட சாரதி உரிமத்தின் விபரங்களை இணையவழி சரிபார்த்தல். | 25 |

EOG 10 - 0084

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.